அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 02 /2018
தேதி : 10.01.2018

**தனியார் துறையுடன் இணைந்து போக்குவரத்து துறையை லாபகரமான துறையாக மாற்ற ஒப்பந்தம் செய்ய வேண்டும்.**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ரா.சரத்குமார் வலியுறுத்தல்.**

தமிழகம் முழுவதும் உள்ள போக்குவரத்து தொழிலாளர்கள் ஊதிய உயர்வு, பணிக்கொடை, ஓய்வூதியப் பலன் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஜனவரி 4ம் தேதி முதல் தொடர்ந்து 7 வது நாளாக வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். இதனால் பேருந்து சேவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலை நிறுத்த போராட்டத்தால் ஏழைஎளிய, நடுத்தரவர்க்க பொதுமக்கள், பள்ளி, கல்லூரிக்கு செல்லும் மாணவர்கள், பணிக்கு செல்லும் அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்கள், மருத்துவமனைக்கு செல்லும் நோயாளிகள், கிராமப் பகுதியில் உள்ள மக்கள் மற்றும் பண்டிகை காலம் என்பதால் வியாபாரம், சிறுதொழில் புரிவோர், குடும்பத்துடன் வெளியூர் செல்வோர் என அனைத்து தரப்பினரும் அதிக அளவில் பாதிப்படைந்துள்ளனர்.

இதற்கு உடனடி தீர்வாக தனியார் பேருந்து, சிற்றுந்து உரிமையாளர்கள், தனியார் கல்லூரி உரிமையாளர்களுடன் கலந்து ஆலோசித்து பொதுமக்களின் இந்த துன்பத்திற்கு உடனடியாக உதவி செய்ய முன்வர நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏற்கனவே அமைச்சர் அறிவித்தபடி ரயில் போக்குவரத்தை மேலும் அதிகரிக்க வேண்டும்.

..2

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624





மேலும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறைக்கு நிரந்தர தீர்வு காணும்வகையில், மேலாண்மையை மேம்படுத்தவேண்டும். அன்றாட அலுவல்களின் உற்பத்தி திறனை அதிகரிக்க தனியார் துறையுடன் இணைந்து ஒரு குறைந்த கால அவகாசத்திலேயே இந்த துறையை லாபகரமான துறையாக மாற்றுவதோடு முழுவீச்சில் அரசு செயல்படவேண்டும். எதிர்வரும் பட்ஜெட்டில் இதற்கான ஒரு தெளிவான வரைவுத்திட்டம் சமர்பிக்கப்படவேண்டும்.

இதில் பொதுமக்களுக்கு பேருந்து நிலையத்தில் தேவையான அடிப்படை வசதிகள், ஓய்வெடுக்கும் அறைகள், ஓட்டல்கள் மற்றும் ஊழியர்களுக்கு தேவையான வசதிகள் பேருந்துகளை சுத்தம் செய்தல், பேருந்து பராமரிப்புகள் போன்றவற்றை தனியார்துறையுடன் ஒப்பந்தம் செய்வதோடு, ஊழியர்கள் பணி நிரந்தரம், ஊழியர் சேர்க்கை என்று இவற்றுடன் அரசும் இணைந்து பொதுமக்கள் பாதிக்காத வகையில் லாபகரமான துறையாக மாற்றுவதற்கு இருத்தரப்பும் முயற்சி செய்யவேண்டும். இதனை ஒரு குறிப்பிட்ட கால ஒப்பந்தத்திற்கு நடைமுறைபடுத்தி அந்த காலத்திற்கு பிறகு முறையாக வரவு செலவுகளை கணக்கிட்டு மேலும் திட்டத்தை செம்மைபடுத்த முயற்சிக்கவேண்டும்.

பண்டிகை காலத்தில் மட்டுமல்லாமல் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை எந்த வகையிலும் பாதிக்காத வகையில் தொழிற்சங்கம் – அரசாங்கம் என இருதரப்பும் உடனடியாக பிரச்சனையை முடிவுக்கு கொண்டுவரவேண்டும்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ரா.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com